தொகுதி- ௫௬ Vol. 56

பகுதி- ௩ No. 3

# செந்தமிழ்

திருவள்ளுவர்

ஆண்டு 1991

சார்வரி - ஆனி

JUNE 1960

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உ

## உள்ளுறை

1. சிலம்பில் ஒரு பரல் 65
சுப. மணிமொழியன்

2. உலகச் சமயங்கள் 73
கி. பழநியப்பன்

3. இருவேறுலகத்தியற்கை 78
வெ. சி. சீனிவாசன்

4. திருக்கோவையாரில் உவமை நயம் 82
மகா வேங்கடராமன்

5. வெண்மதி 86
மல்லியன்பன்

6. கிழவர் இளங்கோ 87
இரா. இளங்குமரன்

7. சங்கச் செய்திகள்

---

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L C.
2. திரு. சித்தாந்தகலாநிதி, பேராசிரியர், ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph. D சென்னை.
4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர். மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர்.

கடவுள் துணை

# செந்தமிழ்

| | | |
|---|---|---|
| தொகுதி. ௫௬<br>Vol. 56 | திருவள்ளுவர் ஆண்டு 1991<br>சார்வரி—ஆனி<br>1960 — June | பகுதி. ௩<br>No. 3 |


54-ஆம் பக்கத் தொடர்ச்சி

## சிலம்பில் ஒரு பரல்

சு. ப. மணிமொழியன், B. A. (Hons.)

குற்றமற்ற தன் கணவனைக் கொலை செய்த மதுரையைப் பட்டாங்கி யானுமோர் பத்தினியேயாமாகில் ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் என்று கண்ணகி வஞ்சினங் கூறி எரிக்கின்றாள். கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன், மேற்றிசைவாயில் வறியேன் பெயர்கின்றேன் எனக் கண்ணகி வருந்திக் கொண்டு திருச்செங்குன்றில் அடி வைக்கின்றாள். குறமகளிர் கண்ணகியைக் கண்டு தொழுகின்றனர். சேரன் செங்குட்டுவன் மலைவளங் காண வந்திருக்கையில், குன்றக்குரவர் தாம் கண்ட கானவேங்கைக் கீழோர் காரிகை தான் தனித்துயரெய்தி நின்ற நிலையைச் சொல்கின்றனர். தன் அகனுடைந்த பத்தினியைப் பரவல் வேண்டுதற்கு விற்றலைக் கொண்ட வியன்பேரிமயத்துக் கற்கால் கொணரச் செங்குட்டுவன் முனைகின்றான். வாய்வாள் ஆண்மையின் வண்டமிழ் இகழ்ந்த காய்வேல் தடக்கைக் கனகனையும் விசயனையும் செங்குட்டுவன் தன் சினவலைப் படுத்திக் கல்லெடுத்து வருகின்றான். கங்கைப் பேர் யாற்றில் அக்கல்லை நீர்ப்படை செய்கின்றான். கோவலன் கண்ணகியர் நிலை கேட்டு, அடைக்கலம் இழந்தமைக்கு வருந்திய இடைக்குல மாதரி இடையிருள் யாமத்து எரியகம் புகுகின்றாள். என்

னேடு இவர் வினை உருத்ததோவென உண்ணுநோன்போடு கவுந்தி உயிர் துறக்கின்றார். கோவலன் கண்ணகி பெற்றோர் துறந்து உயிர் விடுகின்றனர். மாதவி துறவு பூண்கின்றாள். செங்குட்டுவன் எடுத்து வந்த கல்லால் கண்ணகிக்குப் படிவம் செய்து காப்புக்கடை நிறுத்து கின்றான். கடல்சூழ் இலங்கைக் கயவாகு உட்படப் பலநாட்டு மன்னரும் வந்து விழாவில் கலந்து சிறப்படைகின்றனர்.

இவ்வாறு ஆற்றொழுக்காகச் செல்லும் காப்பியப் போக்கினை ஊன்றி நோக்கின், காப்பியத்திலுள்ள ஒவ்வொரு காதையும் இன்றியமையாதது என்பது நன்கு விளங்கும். நாட்டையும் காட்டையும் கடந்து செல்கின்ற கோவலனும் கண்ணகியும் தொடர்ந்து சென்றே மதுரையை அடைகின்றனர் என்று கூறின், சிலம்பு காப்பியப் பண்போடு நாடகப் பண்பையும் பெற்றமைக்குக் குறைவு உண்டாகும். இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சியாகவும் தோன்றும். உற்ற நாட்டினின்று மற்ற நாட்டுக்குச் செல்கையில், அதுவும் குலந்தருவான்பொருட்குன்றத்தைத் தொலைத்துவிட்டோமே எனும் நொந்த உள்ளத்தோடும், மண்மகளறியா வண்ணச்சீறடிக் கண்ணகியை மண்மகளறிய அழைத்து வருகின்றோமே எனும் வருத்தத்தோடும் செல்கையில் இடையிடையே தங்கிச் செல்ல நேர்கின்றது. இவ்வாறு அவர்கள் தங்கிச் செல்கின்ற இடங்களைச் சுருக்கமாகச்சுட்டிச்செல்லுதல் ஆசிரியரின் கடமையாகின்றது. அந்த முறையில், வையையாற்றைக் கடந்து வந்து மதுரையின் ஊர்ப்புறத்துக் கவுந்தியுடன் தங்கும் கோவலன் கண்ணகியரைக் காட்டுகின்ற கடமை இளங்கோவுக்கு இருக்கின்றமையால், 'புறஞ்சேரியிறுத்த காதை' என்பதனை 'வேட்டுவ வரி'க்கும், 'ஊர்காண் காதை'க்கும் இடையில் அமைக்கின்றார். கோவலனும் கண்ணகியும் தம் நிலையில் திரிந்து வருகின்றபோது நேராக ஊருக்குள் செல்லுதற்கேற்ற மனநிலை இல்லாமையாலும்-அறியாத ஊருக்குச்செல்கையில், அறிந்த கவுந்தியின் துணையே சிறந்தது என்று எண்ணுகின்றமையாலும்—அறம்புரி மாந்தரன்றிப் பிறர் சேராப் புறஞ்சிறை மூதூரில் கவுந்தியுடன் தங்குதலால் தம் தகுதிப் பாட்டிற்குத் தாழ்வேற்

படாது என்று எண்ணுகின்றமையாலும் புறஞ்சேரிக்கண் தங்குகின்றனர். அவ்வாறு தங்கும் அவர்களைக் காட்டப் 'புறஞ்சேரியிறுத்த காதை' என்பதனை இளங்கோ அமைக்கின்றார்.

இக்காதை சிலம்பில் இடம்பெற்றமையால், தென்னவர் தம் செங்கோல் சிறப்பு—கோவலனைப் பிரிந்த மாதவியின் மாசில்லா மனநிலை—அத்தகைய மனநிலையால் பொறுக்கமாட்டாது கோவலனுக்கு விடுக்கும் முடங்கல்—கோவலன் கண்ணகியர் பிரிவால் கோவலனின் பெற்றோர் உறும் நிலை— கோவலன் மாதவியைப் பிரிந்து வருகையில் அவள் மீது கொண்டிருக்கும் எண்ணத்தினின்று மாறுபடுதல் — தன் பெற்றோரைப் பிரிந்தமைக்காகக் கோவலன் உறும் மனத்துயர் முதலியவற்றை அறிந்துகொள்ள வாய்ப்பேற்படுகின்றது. இவற்றையெல்லாம் இளங்கோ சொல்லுகையில்,வரலாற்றுநிகழ்ச்சிகளை வரிசையாகச் சொல்லுதல் போல் இல்லாமல், செவ்விய இனிமை சேர்ந்த நற்பொருளில் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய முறையில் சொல்கின்றார்.

> **''கோள்வல் உளியமும் கொடும்புற் றகழா**
> **வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலா**
> **அரவும் சூரும் இரைதேர் முதலையும்**
> **உருமும் சார்ந்தவர்க் குறுகண் செய்யா**
> **செங்கோல் தென்னவர் காக்கும் நாடென**
> **எங்கணும் போகிய இசையோ பெரிதே''**

என்று தென்னவர் நாட்டையும், செங்கோலையும் கோவலன் வாயிலாகப் பாராட்டுகின்ற இளங்கோ, நாடகத்திறன் நன்கறிந்தவர் என்பதை இங்குக் காட்டுகின்றார். நாடகப் போக்கில் பின்னர் நிகழும் நிகழ்ச்சிகளை முன்னரே வெளிப்படையாகக் கூறின் நாடகச் சுவை குன்றும். பின்னர் நிகழ்வதை முன்னர்க் குறிப்பாகக் கூறலாம் அல்லது பின்னர் நிகழ்வதற்கு மறுதலையாக முன்னர்க்கூறலாம். முன்னதிலுள்ள சுவையைவிடப் பின்னதில் சுவை மிகுதி. சுவை மிகுதி பயக்கும் திறத்தையே இளங்கோ இங்குக் கையாள்கின்றார். காப்பியத்தைப் படிப்பவரோ அல்லது நாடகத்தைப் பார்ப்பவரோ அடுத்து நிகழும் நிகழ்ச்சியை ஆர்வத்தோடு எதிர்நோக்கும்போது அதிர்ச்சியாகிய ஒரு மெய்ப்

பாட்டைப் பின்னர் அடைவதற்கு இங்கு வழி செய்கின்றார். காட்டு விலங்குகளே மக்கட்குத் துயர் செய்யாதவையாயிருக்கையில், நாட்டு மன்னன் ஒருநாளும் ஒருவருக்கும் ஊறு செய்யான் என்னும் நல்லெண்ணத்தை ஊட்டுகின்றார். இவ்வாறே ஏனைக் காதைகளிலும்,

> ''கோலின் செம்மையும் குடையின் தண்மையும்
> வேலின் கொற்றமும் விளங்கிய கொடையும்
> பதியெழு வறியாப் பண்பு மேம்பட்ட
> மதுரை மூதூர்''
> ''தீது தீர் மதுரையும் தென்னவன் கொற்றமும்''

என்றெல்லாம் பாண்டியனைப் பற்றி நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் ஊட்டுகின்றார். ஊட்டிக்கொண்டே வருபவர், கொலைக்களக் காதையில் ''மண்ணக மடந்தை வான் துயர்கூரக் காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்'' என்று சொல்லும்போது, எதிர் நோக்காத நிகழ்ச்சியால் அதிர்ச்சியாகிய மெய்ப்பாடு தோன்றுகின்றது. எனவே புறஞ்சேரியிறுத்த காதையில் பாண்டியனைப் பற்றிய நாடகக் குறிப்பு மொழி (Dramatic irony) யினை இளங்கோ ஆளுதல் சிறப்பாக உள்ளது.

கோவலன் பிரிவால் கொடுந்துயர் எய்தும் மாதவியின் மனமலி அன்பையும் தூய்மையையும் படிப்படியாகக் காட்டிக்கொண்டே வருகின்றார் இளங்கோ. உறுப்பினர்தம் பண்பு, காண்போரால் விரும்பத்தக்கதாயிருப்பினும், விரும்பத்தகாததாயிருப்பினும் விரைவில் வெளிப்படுத்தப்படின், சுவை குறையும். கோவலனது பிரிவுக்குப்பின் மாதவி தன் குடியின் தன்மைக்கு அடிமையாகாமல் தூய்மையோடு வாழ்ந்து சிறப்புறுகின்றமையினை நாடகப்பண்பு குன்றாமல் நன்கு காட்டுகின்றார். தன் உள்ளத்துயரை வேனிற்காதையில் முடங்கல் வாயிலாக வெளிப்படுத்தும் மாதவியின் இறுகிய அன்பகத்தைப் புறஞ்சேரியிறுத்த காதையில் பொலிவுடன் காட்டுகின்றார். மாதவியின் இவ்விரு முடங்கலும் தலைசிறந்த காதல் மெய்ப்பொருட்களைத் தாங்கியனவாயுள்ளன. மாசில்லாத மாதவியை அறிய இவ்விரு முடங்கலுமே போதிய சான்றாம். கோவலன் தன்னை அறவே வெறுத்துச் சென்று

விட்டமையினை மாதவி முதலில் அறியாள் என்பதையும் அவ்வாறு அறியினும், அது கோவலனது ஊடல் என்று எண்ணிக் கொண்டால் தான் அவனை மீண்டும் அழைத்து அவனோடு கூட முடியும் என்னும் காதல் உளவியல் மாதவிக்கு நன்கு தெரிந்திருக்கின்றது என்பதையும் வேனிற்காதையில் வரும் முடங்கல் தெளிவுபடுத்துகின்றது. கோவலன் தன்பால் ஊடலே கொண்டுள்ளான் என்றெண்ணும் மாதவி, அவ் வூடல் களைதற்கேற்ப,

> ''மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
> இன்னிள வேனில் இளவர சாளன்
> அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
> திங்கட் செல்வனும் செவ்வியன் அல்லன்
> புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
> தணந்த மாக்கள் தந்துணை மறப்பினும்
> நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
> இறும்பூ தன்றிஃ தறிந்தீமின்''

என்று தளைவாய் அவிழ்ந்த தனிப்படு காமத்து விளையா மழலையின் விரித்துரை எழுதி அவனுக்கு விடுக்கின்றாள். மாதவியின் உள்ளத்தில் தூய உணர்வு ஒன்றே துலங்குகின்றமையாலும் தன் குலப்பிறப்பாட்டியைப் பிரிந்து வந்தமை போன்று தன்னையும் ஒரு நாளில் விட்டுப் பிரிந்து சென்றுவிடுவானோ என்னும் எண்ணம் துளியும் இல்லாத அளவிற்குக் கோவலன்பால் கொண்டிருக்கும் நம்பிக்கையாலுந் தாம், உட்பொருள் எதுவுமின்றி இம்முடங்கல் எழுதுகின்றாள். இம் முடங்கலால் கோவலனுக்கு மாதவிமீது மேலும் வெறுப்பு வளர்கின்றது. இவ்வாறு மாதவி, கோவலன் இருவரும் இதுவரை கொண்டிருக்கின்ற மனநிலைகளில் வளர்ச்சியும் மாற்றமும் ஏற்படுதலைத் தெளிவாக விளக்குவது புறஞ்சேரியிறுத்தகாதை. கோவலன், தன் செயல் எதிலும் வருத்தமுறுமாறு தான் நடந்துகொண்டிருக்கலாமோ என்றுஎண்ணித் தான் மனமறிய மாசில்லாதவள் என்பதைத் தெளிவுபடுத்திக் கோவலனுக்கு மீண்டும் முடங்கல் எழுதுமளவுக்கு மாதவி மனவளர்ச்சி பெறுகின்ற நிலை இக்காதையால் தெரிகின்றது. முதல் முடங்கலை மறுக்கும் கோவலனது மனநிலையை வசந்தமாலை வாயிலாகத் தெரிந்து

கொள்ளும் மாதவி, உடனே தானும் கோவலனை எண்ணுமல் மறந்து வாழலாம். ஆனால் அவனிடத்துக்கொண்ட அளப்பரும் அன்பு அவளுக்கு மேலும் மனவளத்தைக் கொடுக்கின்றமையால்தான், இரண்டாம் முடங்கலில் அவனுக்குத் தன் அன்புப் பணிவைத் தெரிவிக்கின்றாள். அறியாமல் வெளிவந்த சொற்கட்கு அகம் வருந்துகின்றாள். கையறு நெஞ்சத்தோடுள்ள தனது பிரிவுக்காக வருந்துகின்றாள். முதல் முடங்கல் எழுதுகையில், தன் வடியாக் கிளவிக்காகக்கோவலன் வருந்தியிருக்கலாமோ என்று எண்ணாத மாதவி, இரண்டாம் முடங்கல் எழுதுகையில் அவ்வாறு எண்ணுமாறும்—அதற்காகத் தன்மீதே நொந்துகொண்டு, கோவலனைப் பொறுத்தருள வேண்டுமாறும் அவள் பெறுகின்ற மனவளர்ச்சி,

"அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி அன்றியும் குலப்பிறப் பாட்டியோடு
இரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி!"

என்று வரும் முடங்கலைப்பெற்ற புறஞ்சேரியிறுத்த காதையால் தெரிகின்றது.

"மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள்" என்று சொல்லி மாதவியைப் பிரிந்துவரும் கோவலன், மாதவியின் முதல் முடங்கல் பெறுகையிலும், அவளிடம் கொண்டிருக்கும் தாழ்ந்த எண்ணத்தையே வலியுறுத்திக்கொள்கின்றான். ஆனால் மாதவி, தான் தவறு எதுவும் செய்தவளாக உணரவில்லை என்றும்—அவ்வாறு தவறே செய்திருப்பினும், பெற்றோரைப் பிரிந்து கண்ணகியோடு இரவில் செல்லும் அளவுக்குத் தான் தவறொன்றும் செய்யவில்லை என்றும் பெற்றோரைப் பிரிந்து கற்புடையாளோடு வேற்று நாட்டிற்குச் செல்லுதல் தகுதியன்று என்றும் தன்னலமற்ற உணர்வினை இரண்டாம் முடங்கலில் காட்டுகையில் தான், "தன் தீதிலள் எனத் தளர்ச்சி நீங்கி என் தீது என்றே எய்தியது" உணர்கின்றான் கோவலன். இவ்வாறு கோவலன், மாதவிமீது கொள்ளும் கருத்து மாற்றத்தினை அறிதற்கு உதவுவது இக்காதை.

மாதவியிடத்துக் கோவலன் இருக்கையில் கண்ணகியையோ அன்றித் தன் பெற்றோரையோ எண்ணாது உணர்வு வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றான். அத்தகைய உணர்வுகள் மறைந்து கண்ணகியின் நிலைக்காக,

"கடுங்கதிர் வேனில்இக் காரிகை பொறாஅள்
படிந்தில சீறடி பரல்வெங் கானத்து"

என்று வருந்துகின்ற வாயிலாகவும், தன் பெற்றோர் நிலைக்காக

"நடுக்கங் களைந்தவர் நல்லகம் பொருந்திய
இடுக்கண் களைதற்கு ஈண்டெனக்"

கோசிகனிடம் மாதவியின் முடங்கலையே கொடுத்துப் போக்குவதன் வாயிலாகவும் அவன் அறிவு வழிப்படும் செய்தியை அறிவிக்கின்றது இக்காதை.

கோவலன், கண்ணகியைப் பிரிந்து மாதவியிடத்திருக்கையில் மிகுதியாக வருந்தாத அவன் பெற்றோர், கண்ணகியை அழைத்துக் கொண்டு வேற்றுநாடு சென்றதும் மிகுதியாக வருந்தி அருமணி இழந்த நாகம் போன்றும், இன்னுயிர் இழந்த யாக்கையர் போன்றும் உள்ளனர். இவர்தம் வருத்தம், கண்ணகியைக் கோவலன் உடன் அழைத்துச் சென்றமையால் ஏற்பட்டதே எனலாம். கோவலன் போற்றாவொழுக்கம் புரிகையில், கண்ணகிகொள்ளும் மனநோயை அவன் பெற்றோர் முன் காட்டாதவாறு மறைத்துப் பொய்ப் புன்முறுவல் செய்கின்றாள். அப்பொழுது அவர்கள் வருந்தி அன்புள்ளத்தோடு அவளைப் பாராட்டுகின்றனர். அத்தகைய அன்பிற்குரிய மென்மை வாய்ந்த கண்ணகியையும் உடனழைத்துச் சென்றுவிட்டானே என்று அவர்கள் எண்ணுதலாலே தணிப்பருந் துயர்ப்படுகின்றனர். நீண்ட காலம்வரை மாதவியிடத்து இருந்துவிட்டுத் தன் மனையை மனத்திற் கொண்டு வந்தவுடனேயே மனையில் தங்காது மீண்டும் சென்றுவிடுகின்றமை, பெற்றோர் அல்லாத மற்றவர் உள்ளத்திற்கும் வருத்தத்தைக் கொடுக்கும்போது, பெற்றவர் உள்ளத்திற்குப் பெருந்துயர் கொடுத்தல் இயல்பே என்னும் உளவியலையும் அறிவிக்கின்றது இக்காதை.

இவ்வாறெல்லாம், மாதவி, கோவலன் அவன் பெற்றோர் இவர் தம் மனநிலைகளில் ஏற்படும் ஒரு திருப்பத்தைக் காட்டுகின்ற இக் காதையால் வேறு சில பொது உளவியல்களையும் அறிந்துகொள்ள வாய்ப்பேற்படுகின்றது. மாதவியின் முடங்கலைக் கொண்டுவரும் கோசிகன் கோவலனை ஒரு நீர்நிலை மருங்கில் காண்கின்றான். காதலி தன்னொடு கானகம் போந்தமைக்கு ஊதுலைக் குருகைப்போல் உயிர்த்தும் கலங்கியும் உருவம் திரிந்து கோவலன் காட்சியளிக்கின்றமையால் கோசிகனுக்கு ஐயம் ஏற்படுகின்றது. கோவலனே என்று துணிந்து மாதவியின் முடங்கலைக் கொடுக்கவும் கூடாது. அதே வேளையில் கோவலன்தானா அன்றிப் பிறனா என்று தெரிந்துகொள்ளவும் வேண்டும் என்பதற்காக இளங்கோ மிகத் திறமையோடு கோசிகனை உருவாக்குகின்றார். கோசிகன், 'மாதவி' என்னும் பெயர்பெற்ற கொடியின் பக்கத்தில் சென்று, ''கோவலன் பிரிவால் கொடுந் துயர்ப்படும் மாதவி போன்று வேனிற்காலத்தில் வாட்டங் கொண்டாயோ மாதவி?'' என்று வினவுகையில், அண்மையில் நிற்கும் கோவலன் கோசிகனை நோக்கி ''யாது நீ கூறிய உரையீது ஈங்கு?'' என்கின்றான். உடனே கோசிகன் தன் ஐயம் அகற்றிக் கோவலனே எனத் துடிக்கின்றான். உளவியலோடு அணுகி, நாடகப்பண்பு நன்கு வெளிப்படுமாறு செய்யும் இடங்களில் சிறந்ததாக இருக்கின்றது இக்காதை.

மனத்துயரோடும் களைப்போடும் மதுரைப் புறஞ்சேரிக்கண், கண்ணகியோடு தங்கும் கோவலன், கண்ணகிக்காக வருந்துகின்றான்—தன் பெற்றோர்க்காக வருந்துகின்றான் - மாதவிக்காக வருந்துகின்றான். இவ்வாறு துயரமே அவனைத் தொட்டசைக்கும் நிலையில் அவன் இருக்கையிலும் யாழ் இசைக்கின்றான். கானல் வரியில் இன்புற்றிருக்கையிலும் யாழ் இசைக்கின்றான்; புறஞ்சேரியிறுத்த காதையில் துன்புற்றிருக்கையிலும் யாழ் இசைக்கின்றான்; இன்பத்தில் இயல் இசை நாடகம் மூன்றுக்கும் அடிமையாகும் உள்ளம், துன்பத்தில் இசைக்கு மட்டுமே இசையும் எனும் உளவியலை அறிதற்கு

> ''பாடும் பாணரிற் பாங்குறச் சேர்ந்து
> செந்திறம் புரிந்த செங்கோட்டு யாழில்
> ... ... ... ... ... ... ... ...
> பாடற் பாணி அளைஇ அவரொடு''

என்று கோவலன் செயலைக் கூறும் புறஞ்சேரியிறுத்த காதை பயன்படுகின்றது.

[தொடரும்]

# உலகச் சமயங்கள்

கி. பழநியப்பன்

## 6. இசுலாம் சமயம்

(தொகுதி ௫௫ – பகுதி ௧௨-ல் **380**-ஆம் பக்கத்தொடர்ச்சி)

மெக்கா நகர மக்கள் முகம்மதுவின் பெருமையை உணராது அவரை இழிவு படுத்தினர். ஆனால் யாதிரிப் நகரில் முகம்மதுவிற்கு அன்பு நிறைந்த வரவேற்புக் கிடைத்தது. அத்துடன் அந் நகரமக்கள் அவரை நகரத்தின் அரசனாகவே பட்டம் கட்டிவிட்டனர். யாதிரிப் என்ற நகரப் பெயரும் மெதீனா என்று மாற்றப்பட்டது. மெதீனா என்றால் தேவதூதரின் நகரம் என்பது பொருள்.

மெதீனாவில் முகம்மதுவின் செல்வாக்கு மிகவும் வளர்ந்தது. நண்பர்களும் பலர் உண்டாயினர். அவரைப் பின்பற்றுபவர்கள் தொகையும் அதிகரித்தது. அதன் பயனாக முகம்மது ஊக்கம் கொண்டு தன்னுடைய கொள்கைகளை அரபிய நாடு முழுவதும் பரப்ப வேண்டுமென்று எண்ணினார். அதற்கான திட்டங்களையும் வகுத்தார்.

அவருடைய திட்டங்கள் நிறைவேறுவதற்கு நல்ல வீரர்களையுடைய படையொன்று இருக்க வேண்டியது இன்றியமையாமையாயிற்று. எனவே படையொன்று திரட்டப்பட்டது. ஒரு படையை வைத்துக் கொள்ள வேண்டுமென்றால் அதற்குச்செலவு அதிகமாகும்; செலவுகள் அதிகரித்தால் அதற்குத்தக்க வருமானமும் அதிகரிக்க வேண்டும். ஆகவே வருமானத்தைப் பெருக்கப் பல வழிவகைகளை முகம்மது ஆழ்ந்து சிந்தித்து முடிவில் ஒரு வழியைக்கண்டார். மெக்காவிலுள்ள தன் விரோதிகளை அடககுவதற்கும் தன் படைவீரர்களுக்கான செலவுகளுக்கும் ஏற்ற ஒரு வழியைக் கண்டார். அதாவது மெக்காவிலிருந்து வரும் வணிகர் கூட்டங்களைப் பாலைவனங்களில் வழிமறித்துக் கொள்ளையடித்தலேயாகும். முகம்மது

விற்குப் பாலைவனத்திலுள்ள ஒட்டகப் போக்குவரத்துப் பாதைகளெல்லாம் நன்ருகத் தெரிந்திருந்தபடியால் அம் முயற்சியில் பல வெற்றிகள் கிடைத்தன, கொள்ளையடிக்கப் பட்ட பொருள்கள் படைவீரர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப் பட்டன. இதனுல் மெக்கா மக்கள் பெருந் தொல்லைக்குள் ளானுர்கள். முடிவில் அவர்கள் முகம்மதுடன் போர் தொடுப்பதே சிறந்த வழி என்ற முடிவிற்கு வந்தனர். அதைத்தான் முகம்மதுவும் எதிர்பார்த்தார்.

மெக்கா மக்கள் கூலிப்படை ஒன்றைத் திரட்டி மெதீனு வின் மேல் போர்தொடுத்தனர். பல நாட்கள் இரு சாராரும் கடுமையாகப் போரிட்டனர். முகம்மது முன்னின்று, அல் லாவின் பெயரால், தம் வீரர்களுக்கு ஊக்கத்தை யூட்டித் தாமும் போரிட்டார். ஒருநாள் முகம்மதுவின் உயிருக்குப் பெரிய ஆபத்து ஏற்பட்டது மெக்கா வீரனெருவன் முகம் மதுவிற்கு மிக அருகில் வந்து அவரை வெட்டுவதற்கு வாளை ஓங்கிவிட்டான். அடுத்த விநாடியில் வாள் முகம்மதுவைத் துண்டித்து விடும். அச்சமயம் திடீரென்று முகம்மதுவின் நண்பனெருவன் குறுக்கேவிழுந்து, அவ் வெட்டைத் தாங்கிக் கொண்டான். அவன் கைகள் துண்டிக்கப் பட்டன. ஆனுல் மொக்கா வீரன் அதைக் கவனியாது முகம்மதுதான் கொல் லப்பட்டார் என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தான். இதைக் கேட்டு மெதீனுப் படையினர் பின்வாங்கி ஓடினர். மெக்காப் படையினர் வெற்றி ஆரவாரத்துடன் ஊர் திரும்பினர். ஆனுல் அவர்களுடைய மகிழ்ச்சி வெகுநாட்கள் நீடிக்க வில்லை. ஒரு சில நாட்களில் மறுபடியும் மெக்கா வணிகர் கள் கொள்ளையடிக்கப்பட்டார்கள் என்ற செய்தியும், முகம் மது கொல்லப்படவில்லை என்ற செய்தியும் வந்தன. திரும் பவும் போருக்குச் சென்றனர், ஆனுல் இத் தடவை அவர் கள் படை முகம்மதுவினுல் முறியடிக்கப் பெற்றுப் படு தோல்வியடைந்தது. சின்னபின்னமாகச் சிதறி ஓடி அவர் கள் உயிர் தப்பினர். இதனுல் முகம்மதுவின் செல்வாக்கு

வளர்ந்தது; அவரைப் பின்பற்றுவோர் தொகையும் பெருகிற்று.

வெற்றியினாலும், செல்வாக்கினாலும் முகம்மது எவ்வகையிலும் மாறுதல் அடையவில்லை. எப்பொழுதும்போல அமைதியாகவும் இனிமையாகவுமே எல்லோருடனும் பழகி வந்தார். தம்முடைய பணியாட்களைத் தம்முடைய மக்களுக்கு ஒப்பாகக் கருதி வந்தார்; தம் வீட்டு வாசலில் ஒரு பலகை அமைத்து அதில் வந்து அமரும் அத்தனை பேர்களுக்கும் உணவும் உடையும் வழங்கினார். போர்க்களத்திலும் சரி, மற்றைய இடங்களிலும் சரி, மற்றவர்களுக்கு ஒப்பாகத் தாமும் உடனிருந்து வேலை செய்வார். சிறு பிள்ளைகளைக் கண்டால் முக்கிய வேலைகளையும் விட்டு விட்டு அவர்களுடன் விளையாடுவதில் மகிழ்வார். இத்தகைய அரிய குணங்களைக்கண்ட மக்கள் அவரை மிகவும் விரும்பியதுடன் அவருடைய கொள்கைகளைப் பின்பற்றவும் திரண்டு வந்தனர். அவர்களுக்கு அவர் கூறிய முக்கிய அறவுரைகள் இவையே.

1. அல்லாவை நம்புங்கள் — முகம்மதுவே அவர் தூதர்.
2. நாள் தோறும் ஐந்துமுறை தொழுதல் வேண்டும்
3. ஏழைகளுக்கு அன்புடன் ஈதல் வேண்டும்
4. நோன்பு மாதத்தில் நோன்பு மேற்கொள்ள வேண்டும்
5. ஆண்டு தோறும் புனித மெக்காவிற்குச் செல்ல வேண்டும்.

மிக்க எளிதாகக் கடைப்பிடிக்கக் கூடிய இவ்வறவுரைகளை மக்கள் விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டனர். ஆனால் மெக்காவிற்குச் செல்வது மட்டும் அவர்களுக்குக் கடினமாகத் தோன்றியது. அங்குச் சென்றால் மெக்கா மக்கள் தங்களுக்குத் தீங்கு விளைவிப்பார்கள் என்று கருதினர். மக்களிடையே இருந்த அவ்வச்சத்தைத் தீர்ப்பதற்காக முகம்மது தாமே எல்லோரையும் அழைத்துச் செல்ல முன்வந்தார். பத்தாயிரம் வீரர்களுடன் மெக்காவை நோக்கிப் புறப்பட்டார். "தேவதூதனாகிய நான், வாளுடன் அனுப்பப் பட்டவன். இன்ப உலகிற்கும், துன்ப உலகிற்கும் வாளே

திறவுகோலாகும். நமது கொள்கைக்காக வாளைப் பயன் படுத்துவோர் நன்மையடைவர்.'' என்ற முழக்கத்துடன் புறப்பட்டார்.

முகம்மது பெரும்படையுடன் வருவதைக் கேட்ட மெக்கா மக்கள் நகரை விட்டு ஓடிச்சென்று குன்றுகளில் ஒளிந்து கொண்டனர். முகம்மது நகரில் நுழைந்தபொழுது அங்கு ஒருவரும் காணப்படவில்லை. நேராகக் கோவிலுக்குச் சென்றார். அங்குக் காணப்பட்ட 360 தெய்வ உருவங்களை யும் ஒன்றன் பின் ஒன்றாக உடைக்கச் செய்தார்.

''வாய்மை தோன்றியது; பொய்மை மறைந்தது''

என்று கூறி ஒவ்வொரு உருவமும் உடைக்கப் பட்டது. அதைத் தவிர அந்நகரில் வேறு எப்பொருளையும் ஒருவரும் தொடக்கூடாது என்று முகம்மது கட்டளையிட்டிருந்தார். விலை உயர்ந்த பொருள்கள் உடையவர்களற்று நகரெங்கும் கிடந்தும் ஒருவரும் அதைத் தொடவில்லை. முகம்மது வழிபாட்டை அங்கு முடித்துக்கொண்டு தம்முடன் வந்தவர்களுடன் மெதீனா திரும்பினார். ஓடிச்சென்ற மெக்காமக்கள் திரும்பி வந்து தாங்கள் விட்டுச் சென்ற பொருள்களெல்லாம் அப்படியப்படியே இருப் பதைக் கண்டு மிக வியப்படைந்தனர். அவர்கள் கண் களையே நம்பவில்லை. முகம்மது அவ்வளவு உயர்ந்த பண் புடையவர் என்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவர் கள் மனம் மாறினர்; மதமும் மாறினர். முகம்மதுவின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டனர். சிறிது சிறிதாக அரேபிய மக்கள் அனைவரும் முகம்மதுவின் இசுலாம் மதத்தை ஏற்றுக்கொண்டனர்.

முகம்மது பல சீடர்களைத் தயாரித்து வெளிநாடுகளுக் கும் சென்று இசுலாம் கொள்கைகளைப் பரவச் செய்தார்.

முகம்மது தமது அறுபத்துமூன்றும் வயதில் தளர்ச்சி யுற்றுப் படுக்கையில் இருந்தார். அச்சமயம் தம் சீடர்களை

அழைத்து பல அரிய அறவுரைகளைக் கூறினர். அவைகளில் மிக முக்கியமானவைகளில் ஒன்று:

> ''நம் கொள்கையை ஏற்றவர்கள் எல்லோரும் உடன் பிறந்தவர்களாகும். அவர்களிடையே உயர்வு தாழ்வு என்பது கிடையாது'' என்பதாம்.

முகம்மது மரணமடைந்தார் என்ற செய்தியை மக்களால் நம்பமுடியவில்லை. அவர்கள் ஈட்டவும் மறுத்தார்கள். முகம்மதுவின் நண்பரும் சீடருமான அபுபேக்கர் என்பவர் வந்து கூறிய பின்புதான் மக்கள் நம்பினர்.

> ''முகம்மதுவை வணங்குவோர் முகம்மது இறந்தார் என்பதை உணருங்கள்; ஆனல் அல்லாவை வணங்குபவர்கள் அல்லா இருக்கின்றார்; அவர் அழிவில்லாதவர் என்பதை உணருங்கள்''

என்று அபுபேக்கர் கூறியதைக் கேட்ட மக்கள் '' அல்லா! அல்லா! அல்லா!'' என்று கூறி அமைதியுற்றனர்.

(தொடரும்)

# இருவேறு உலகத்தியற்கை

புலவர் வெ. சி. சீனிவாசன்

(தொகுதி-௫௫ பகுதி-௯௨-ல் 370ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெடுஞ்செழியன் எண்ணற்ற களங்கள் கண்டு இணையற்ற வெற்றிகள் பெற்ற சமயம். அவன் போர் வீரர் இப் புவனமெங்கும் பவனி வந்து கொண்டிருந்தனர். தலைவணங்கா த் தரணி காவலன் போன்று அவர்கள் தரணி முழுவதும் தலை நிமிர்ந்து நடந்தனர். அவர்கள் வந்த வழியிலிருந்த மக்களுக்குச் சொந்தமான பொருள்களை எல்லாம் கொள்ளை கொண்டு கொழுத்து வாழ்ந்தனர். மக்கள் பாடுபட்டுத் தேடிவைத்த உணவுப் பொருள்களைக் கைப்பற்றினர். அவற்றில் வேண்டியவற்றைச் சுவைத்து, வேண்டாதவற்றை வீசி எறிந்தனர் தெருவிலே. அப்படை வீரர் அனுபவித்தது போக மீதி சுகத்தையே மக்கள் அனுபவிக்க வேண்டும்,

பகைவர் நாட்டில் வளமான ஊர்களைத் தேடிப் பார்த்தனர் அம்மறவர். ஆங்கிருந்த அழகிய மனைகளிலும், புனையா ஓவியம் வரையப்பெற்ற மாளிகைகளிலும் அவர்கள் தீயிட்டனர், ஊர்கள் தோறும் தீப்பிழம்புகள் வானை நோக்கிச் சீறி எழுந்தன. அவ்வூர்கள் இடிந்த சுவர்களாகவும், கருகிய வீடுகளாகவும் காட்சியளித்தன! எங்கு நோக்கினும் அலங்கோலப், அருவருப்பான காட்சி. எல்லாவிடத்திலும் நெடுஞ்செழியனின் மல்லர்கள் வாளாண்மையைக் காட்டி வந்தனர்.

படைவீரரைப் பார்த்தவுடன் சரணடைய வேண்டும். தேவையான பொருளனைத்தும் அவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். வீரரின் ஆசைகளை வீணாக்கக் கூடாது, நெடுஞ்செழியனின் மனதை நிறைவு செய்வதே நமது கடமை.. அவன் மனம் சற்றேனும் வருந்தினால்! சீற்றங் கொண்டால்! பின் இவ்வுலகில் எச்சக்தியும் அதைத் தடுக்க

இயலாது. இன்னும் இவைபோன்ற பலவற்றைச் செய்வான், நம்மைப் பூண்டோடு அழித்து விடுவான்.

அவனை எதிர்த்து நிற்கும் துணிவு இவ்வுலகில் எவர்க்கும் இல்லை. உலகமுழுதும் ஓரணியில் திரண்டாலும் அவன் முன் செல்ல இயலாது. இவ்வாறு மக்கள் மருண்டு மொழிந்தனர்.

..........................................................................நின்''
கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்
கொள்வது கொண்டு கொள்ளா மிச்சில்
கொள்பத மொழிய வீசிய புலனும்''
...............................................................
...............................................................
'' புனைநல்லில் வெவ்வெரி யினைப்பக்
கனையெரி உரறிய மருங்குல் நோக்கி
நண்ணார் நாண நாடொறு ந் நலச்சென்று
இன்னும் இன்னபல செய்குவன் யாவரும்
துன்னல் போகிய துணிவினோன் இவனென'

—கல்லாடர், புறம் 23

கல்லாடர் தந்த கருத்துருக்கும் ஓவியமிது. இரண்டாவது உலகப் பெரும் போரிலே இட்லரைக் கண்டு அனைவரும் அஞ்சியது போலவே நெடுஞ்செழியனைக் கண்டும் இந்நாவலந்தீவு நடுநடுங்கியது. வடக்கே வடபொருப்பு தெற்கே தென்குமரி, கிழக்கிலும் மேற்கிலுங் கடல் ஆகிய எல்லைகட்குட்பட்ட இந்நாவலந்தீவில் அவனது ஏவல் கேட்காத மன்னவரில்லை. அவனது பெயரையும், படையையுங் கண்டே அடி பணிந்த அரசர் பலர். போரில் அடிபட்டு அவன் திருவடிகளைத் தஞ்சம் புகுந்த மன்னர் சிலர். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்ற அளவிலிருந்தது இந்நாவலந்தீவு.

''தென்குமரி வட பெருங்கல்
குணகுட கடல் எல்லையா
தொன்று மொழிந்து தொழில் கேட்ட
வெற்ற மொடு வெறுத் தொழுகிய
கொற்றவர்தங் கோனகுவை''

மதுரைக் காஞ்சி 70—74

இவ்வாறு புலவர் அவனது வெற்றியைப் புகழ்ந்து பாடியபோது அவன் மனம் இன்பக் கடலில் நீந்தியது. அவன் அளவில்லா ஆனந்தங் கொண்டான். அதனோடமையாது அலைகடலுக்கு அப்பாற் சென்றும் தன்னாணையை நிலைநாட்டிட எண்ணினான். தென்கடலுக்கு மத்தியில் அமைந்திருந்த ஒருதீவில் சாலியூர் புகழ்பெற்றுத் திகழ்ந்தது. அலைபாயுங் கடல் தாண்டிச் சென்று அவ்வூரையும் தன்னாட்சிக்குள் அணைத்துக்கொண்டான்.

"தென்கடற் குண்டகழி
சீர்சான்ற உயர்நெல்லின்
ஊர் கொண்ட உயர் கொற்றவ"

—மதுரைக் காஞ்சி.

இவ்வாறு அவன் கொற்றம் வளர்ந்துகொண்டு போனதாகப் புலவர் அறிவிக்கிறார். வீரத்திலும், வெற்றியிலும் அவன் ஒப்பற்றுத்திகழ்ந்தான். உண்மைதான்; ஆனால்; அவ்வெற்றிகளை அடைவதற்கு அவன் படை வீரர் என்னென்ன வெறிச் செயல்களைச் செய்ய வேண்டி வந்தது!

மக்கள் அமைதியாக வாழ இயலவில்லை. தாங்கள் பாடுபட்ட பொருள்களை எல்லாம் படை வீரருக்குக் கொட்டி அழுதார்கள். அவர்கள் உயிருக்கும் உடைமைக்கும் எப்போதும் ஆபத்துக் காத்திருந்தது. துன்பமும் துயரமும் அடுக்கடுக்காக வந்தன. எங்கும் அச்சமே குடிகொண்டிருந்தது. ஆடவர் போரில் உயிர் துறந்தமையால் பெண்கள் கைம்பெண்டிர் ஆயினர். அவர்கள் கணவனை இழந்த துயரத்தையும் வெளியிட அஞ்சி அடங்கி ஒடுங்கிக் கிடந்தனர். கைம்மை நோயால் கருகி உருகினர். தக்கட்கிருந்த ஓரிரு குழந்தைகளை எச்சரிக்கையோடு காத்தனர்.

வீடுகளிலிருந்தால் படை வீரர் வந்து விரட்டுவர் என்றெண்ணிக் காடுகளிற் சென்று ஒளிந்து வாழ்ந்தனர் மக்கள். ஊர்களெல்லாம் உயிரற்ற இடுகாடாகக் காட்சி யளித்தன.

இச் செய்தியினைக் குறிக்க வந்த புலவர் நேரடியாகக் குறிப்பிடாது விலங்குகளின் வாயிலாகக் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

கலைமான் கடும் புலியின் வாய்க்கு இரையாகியது. அஞ்சிய நடையினையுடைய அதன் பிணை தன் மறியை மார்போடு அணைத்துக்கொண்டது. மறியையும் இழந்துவிடுவோமோ என்று அஞ்சி அஞ்சிச் செத்தது. காடு பசுமை இழந்து காணப்பட்டது. துணையை இழந்த பெண்மான் ஆகையால் அது கைம்மை நோன்பு நோற்றதாம். மனம் விரும்பும் இலைகளையும் தழைகளையும் உண்ணாமல் வேளைப்பூவை உண்டதாம். கைம்மை நோன்பு நோற்கும் பெண்கள் வேளையிலை உண்பது இங்கே நினைப்பதற் குரியது.

*''கால முன்பநிற் கண்டனன் வருவல்*
*அருமருப்பு எழிற்கலைப் புலிப்பாற் பட்டெனச்*
*சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை*
*பூளை நீடிய வெருவரு பறந்தலை*
*வேளை வெண்பூக் கறிக்கும்*
*ஆளில் அத்தம் ஆகிய காடே''*

*—புறம் 23*

கல்லாடர் காட்டும் இக்கருத்துருக்கும் ஓவியம் மான்களின் வாழ்வை விளக்கவா எழுந்தது? அல்ல, அல்ல. கைம்மைப் பெண்டிரின் உயிரில்லாவாழ்வை விளக்கவன்றோ! போரால் உண்டாகும் பெரும் துயரத்தைப் படம் பிடித்துக் காட்டவே இப்பாடல் எழுந்தது.

[தொடரும்]

★

# திருக்கோவையாரில் உவமை நயம்

(வித்துவான், மஹா வேங்கடராமன், திருவையாறு)

மணிவாசகப் பெருமானுல் யிடப்பட்டது திருக்கோவையார். இப் பெருந்தகையார் சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவர். சைவ மணமும், தெய்வ மணமும் தமிழில் கமழும்படிச் செய்த செல்வர். இவர் தம் பாடல்களிலெல்லாம் தமிழினிமை விழுமி நிற்கும் கற்பவர் மனத்தைக் கரைத்துக் கசிந்துருகச் செய்யும் வாசகம், இவர் செந்தமிழ்ப் பாக்கள். இவர் இயற்றிய திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார். சிறந்த சொல்லமைப்பும், பரந்த பொருளழகும் கொண்டு மிளிரும் இவர் பாடல்கள். தெய்வப் புலமை பெற்ற பெருந்தகையாதலின் சொற்களும், உவமைகளும் இவரது வாக்கிலே பட்டு வெளிவரக் காத்திருக்கும். இவர் பாடல்களிலே காணப்படும் உவமைகள், அடுத்ததைக் காட்டும் பளிங்குபோல் கொண்ட கருத்தைத் தெற்றெனை விளக்கும் தன்மையன,

உவமை என்பது அணி-அழகு. ஊரின் அழகை உயர்த்துவது கோபுரம். நங்கையின் அழகை உயர்த்துவது நகை. அவை போலப் பாடலின் பொருளை உயர்த்தி, அப்பொருளைத் தெள்ளிதின் புலப்பட வைப்பது உவமை அணியே ஆகும். உவமையின்றேல் ஒரு சில பாடல்களில் ஒன்றுமே விளங்காது போகும். படிப்போர் மனத்துப் பாடலின் பொருள் பதிந்திருப்பதற்கு இவ்வுவமை பெரிதும் பயன்படும். தாயணியாகிய இவ் உவமை அணியை உயர்ந்த முறையில் நயம் தோன்ற அமைப்பவர் நம் மணிவாசகப் பெருமானர்.

பகல் நேரத்தில் தினைப்புனங் காப்பது தலைவியின் பொழுது போக்கு. இதனை அறிந்த தலைவன் தலைவியிடம்

பகல் நேரத்தில் வந்து பழகினான். தினைமுற்றியது. தினை அறுக்கப்பட்ட பின் புனம் வறுமையுற்றிருந்தது. புனம் காக்கும் தொழிலும் தலைவியிடமிருந்து விடை பெற்றுக் கொண்டது. தலைவி வீட்டிலேயே இருந்தாள். இதனை அறியாத தலைவன் புனத்திடம் வந்தான். புனம் வறுமையுற்றிருப்பதைக் கண்டான். இனித் தலைமகள் புனங்காக்க வாராளாயின் அவளை எப்படிக் காண்பது என வருந்தினான். தலைவி, அவனுக்குப் பெறற்கரிய பொருளாயினள். இக் கருத்தை, ஆசிரியர் அழகான உவமையுடன் விளக்குகின்றார்.

"வானுந்து மாமதி வேண்டி அழும் மழப் போலுமன்னே
நானுந் தளர்ந்தனன்; நீயுந்தளர்ந்தனை"—என்று

தலைவன் நெஞ்சை முன்னிலைப் படுத்திக் கூறுவது போல அமைக்கின்றார்.

வானத்தில் ஊர்ந்து செல்லும் தண்மதி, அணித்தாய் இருப்பது போலத் தோன்றினும், அதைக் கைப்பிடிக்க முடியாது. மதியினை விரும்பி அழும் மகவுக்கு, அது கிட்டாமற் போகுமாப் போலே, தலைவியும் கிட்டாள். குழந்தையும் அழுகின்றது. நெஞ்சே! நீயும் அது போன்றே வருந்துவை, என்று உவமை காட்டிச் செல்கின்றார்.

உள்ளத்திற்கும், உடலுக்கும் இனிமை செய்யும் இயல்புடையது வெண்ணிலா. தண்மதி போன்ற தலைவியும் தலைவனது உள்ளத்திற்கும், உடலிற்கும் இனிமை தருபவள். ஆதலால் ஆசிரியர் மதியை உவமை கூறினார். வானூர் மதி கிடைக்காது மழவு அழுகிறது. அதுபோல் தலைவனும் வருந்துகிறான், அதை ஆசிரியர்,

'நானும் தளர்ந்தனன்; நீயும் தளர்ந்தனை நெஞ்சே!'

என்று நெஞ்சை முன்னிலையாக்கிக் கூறினார்.

மங்கையைக் காணவிடத்து மனம் செய்வது அறியாது தளர்ந்து வாடும் நிலைக்குக் குழவியை உவமை காட்டிய நயம் மிகவும் போற்றற்குரியது.

இனி வேறு ஓரிடத்தும் இதே உவமையை அமைக்கின் ருர். பாங்கியால் கூடுதல் பெற்ற தலைவன், தலைவியை வரைந்து கொள்ள நினைந்து, பாங்கியிடம் தலைவிக்குரிய பரிசப் பொருள் யாதென வினவுகின்ருன். அதற்குத் தோழி; தலைவ! இறைவனது ஆணை பரந்து கிடக்கும் இவ்விரு நிலம் முழுவதும் நீ பரிசப் பொருளாகக் கொடுத்தாலும் தலைவியது இடைக்கு ஈடாகாது என்ருள். இதனைக் கேட்ட தலைவன் வருந்துகிருன். ஈண்டு,

> "விசும்புற்ற திங்கட் கழும் மழப் போன்றினி விம்மி விம்மி
> அசும்புற்ற கண்ணேடலருய்.........நெஞ்சே!

என்று உவமையுடன் விளக்குகின்ருர். கேடுறு செல்வங் கொண்டு தலைவியை அடைய முடியாது. கேடில் விழுச் செல்வமற்ற நெஞ்சே! வானத்தூரும் மதியைக் கண்டு விம்மியழும் குழந்தை போல நீயும், தலைவியின் அழகு கண்டு புலம்பி நைவாய் என்றியம்புகின்ருன். அன்பாலன் றிப் பிறபொருட் செல்வங்களால் தலைவியை அடைய முடியாது என்பது தோழியின் குறிப்பு. இக்குறிப்புணர்ந்த தலைவன், தலைவியின் கருத்தறிந்து அவளை உடன் கொண்டு போகச் சம்மதிக்கிருன்.

உடன்போக்கிற்குரிய நாள் குறிக்கப்பட்டது. அன்றிரவு தலைவன் வந்து காத்திருக்குமிடத்துத் தோழி, தலைவியைக் கொண்டு சென்று, தலைவ! உன்னை நம்பிவரும் இச் சேயிழையை ஒருகாலும் பிரியாதே. இல்வாழ்விற்குரிய அறம் மாறுபடாமலும், உன் அருட்டிறம் பிறழாமலும் பார்த்துக் கொள்ளுக என்று தலைவனிடம் ஓம்படை சாற்றுகின்ருள். மேலும், தலைவ! உன்னுடைய அறத்திலும் அருளிலும் பிறழ்வையாயின்

> அருமறையின்; திறந்திரிந்து ஆர்கலியும்
> முற்றும் வற்றும் இச்சேணிலத்தே!

என்று எதிர்மறைவாயிலாக அவன் திண்மையைப் புலப் படுத்துகின்ருள். ஒரு காலத்தும் அறம்மாறி அருமறையின்

திறம் திரியாது. கடலும் நீரில் குறையாது. அதுபோல நீயும் உனது அறத்திலும், அருளிலும் குறைபடாய் என்ருள். அறத்திற்கு வேதத்தையும், கருணைக்குக் கடலையும் உவமையாக அமைத்தார்.

இவ்வுவமை நயத்தால் தலைவனது அறவலியும் அருள் வலியும் வெளிப்படப் புலப்படுவது காண்க. இவ்வுவமை இன்றேல் தலைமகனது வலிமை இவ்வளவு திண்ணிதாகப் புலப்படாததும் காண்க.

உடன் சென்ற தலைவி, தலைவனை மணந்து இல்லறம் நடத்தி வருங்கால் ஒருநாள், தலைவன் தன் நாட்டு அரசனுக்கு உற்றுழி உதவும் பொருட்டுப் பகை தணிவிக்க வேற்றுநாடு செல்லப் போவதாய்க் கூறினன். தலைவனைப் பிரிய வருந்தினள் தலைவி, தான் வேறு தலைவன் வேறு என எண்ணுத அன்புடையளாய தலைவியின் வருத்தம் எத்தகையதாயிருக்கும்? அவ்வருத்த நிலைக்கு மணிவாசகரே உவமை அமைக்கின்ருர்.

"நெருப்புறு வெண்ணெயும் நீருறும் உப்புமென இங்ஙனே
போற்றுப்புறு தோகை புலம்புறல்" — என்கிருர்.

அனலிடைப்பட்ட வெண்ணெய் உருகுவது போலவும், நீரிடைக் கலந்த உப்பு தன் தன்மை மாறுவது போலவும் தலைவி தன் நிலை தடுமாறி நின்ருள் என்பதை வெளிப்படுத்துகின்ருர்.

நெருப்புற்ற வெண்ணெய் உருகி நெய்யாவதும் நீரிடைக் கலந்த உப்பு, தன்னிலை மாறுவதும் நன்மைக்கே. தலைவனும் தன் குலப்பெருமை கருதியே பிரிகின்ருன். ஆயினும், தலைவி வெண்ணெய் போலும், உப்பு போலும் உருகிக் கரைகின்ருள். இவ்வுவமைநயம் நம்மனோரான் சொல்லுந் தரத்ததன்று. இன்பத்திடைத் துன்பமும், துன்பத்திடை இன்பமும் நிகழ்வதை இவ்வுவமை நன்கு விளக்குகிறது.

❋

# வெண்மதி

(மல்லையன்பன்)

1. மண்குளிர்ந்து மரம்வளர மலைமுகட்டிற் றுஞ்சும்
மழைமுகில்கள் கண்டுமஞ்ஞை தோகைவிரித் தாட
வண்ணமலர்த் தேனையுண்ணும் வண்டினங்கள் யாவும்
வாவியெங்கும் பொன்னிறத்தைக் கூட்டுதலைக் காணீர்!

2. பண்ணிசைத்துப் பாடிவரும் பறவையினந் துன்பம்
பாராது பகையின்றி யொருமனதாய் நிற்கத்
தண்ணிலவு வானமதிற் றாரகைகள் சூழத்
தரணியெழில் காணவரும் பவனிதனைப் பாரீர்!

3. கன்னல்மிகு தமிழ்க்கவிஞர் கற்பனைகள் சிறக்கக்
கடல்நடுவே நெடுவழியோன் றமைத்தபின்ன ராங்குப்
பொன்னிறத்தைப் புறம்விடுத்துப் போதவருங் காலைப்
பொலிவுபெற்று ஞாலமெலாம் புகழ்ந்துரைக்கக் காணீர்!

4. அறிவுநிறை யான்றவர்க ளற்பரிடை சொல்லு
மான்றமொழி பயன்சிறிது மடைந்திலது போலச்
செறிவுமிகு மடவியிடைச் செங்கரத்தை நீட்டிச்
செயலற்று வருந்துகின்ற வெண்மதியைப் பாரீர்!

5. எண்ணமெலா மொன்றாகி எதிர்ப்புகளை நீக்கி
இனிமைதரு மேகாந்தச் சோலைதனிற் கூடிக்
கண்மலர்க ளீரிரண்டுங் கவ்வியின்பங் கொள்ளும்
காதலரைக் கண்டுநாணி ஒடுதலைக் காணீர்!

6. அலைகொழிக்கு மாழ்கடல்க ளமைதியுறா வண்ணம்
ஆர்ப்பரித்து ஞாலமதை நடுங்கவைத்த பின்னர்
சலசலக்கு மருவிகளிற் பொன்னிறத்தைக் கூட்டிச்
சதுராடும் வெண்ணிலவின் தன்மையினைப் பாரீர்!

7. வள்ளுவரின் பொன்மொழியை வாயளவிற் சொல்லி
வாழ்வுதனிற் கொள்ளாது வறிதுநிற்கு மிந்தத்
தெள்ளுதமிழ் நாட்டவர்தம் செய்கைதனை யுன்னிச்
சினந்துருவம் தேய்ந்துபோன குறைமதியைக் காணீர்!

8. சாதிமதங் கட்சிபலத் தாம்வளர்த்துத் தீய
சாக்கடையில் வீழுகின்ற தமிழகத்தைக் கண்டு
நீதிநெறி நிலவுகின்ற நீணிலத்தை நாடி
நிலவுநங்கை மலைமுகட்டி மறைந்துவிட்டா லெங்கோ!

# "கிழவர் இளங்கோ"

புலவர், இரா. இளங்குமரன்,
மு. மு. உயர்பள்ளி, திருப்பரங்குன்றம்

இளங்கோவடிகள் தமிழ்க் காவியங்களின் தந்தை ஆவர். முதற் காப்பியமாகச் சிலப்பதிகாரத்தை இயற்றி ஞலும் பின் வந்த காப்பிய நூல்களுக்கு இலக்கணமாக அமையும் சிறப்புப் பெற இயற்றினர். இளங்கோவடிகள் கொண்டிருந்த புலமையையும், அனுபவ முதிர்வையும் அவர்தம் சிலம்பு செவ்வனே தெரிவிப்பதாக இருக்கின்றது. மேலும், தமிழர் எழுத மறந்ததான 'தன் வரலாறு' இளங் கோவடிகளாலேதான் முதற்கண் எழுதப்படுகின்றது. ஆதலின் "தன் வரலாற்றின் தந்தை" என்றும் இளங்கோ வடிகளைக் குறிப்பிடலாம். இவ்விளங்கோவடிகள் சிலம்பு எந்த வயதில் எழுதத் தொடங்கினர் என்பது குறித்து இக் கட்டுரையில் ஆராய்வோம்.

இளங்கோ என்றவுடன் நம்மனக்கண்முன் இளமை தான் வந்து நிற்கின்றது. அவ்விளமைக் கோலந்தான் இளங்கோவடிகள் நூல்யாக்கப் புகுந்த கோலமா எனின் காண்போம். இமயத்தை எல்லையாகக்கொண்டு ஆண்ட பெருஞ் சேரலாதன் பெற்றெடுத்த மக்கள் இருவர். அவருள் மூத்தவன் செங்குட்டுவன்; இளையவர் இளங்கோ! ஒரு நாள் மக்கள் இருவரும் பக்கத்தே இருக்க, சேரலாதன் அரியணையிலே அமர்ந்திருந்தான். அதுகாலையில் சோதிடம் வல்லான் ஒருவன் அவ்விடத்தை அடைந்தான். அவன் இளங்கோவைக் கூர்ந்து நோக்கி "இவ்விளையவனே அரசாளும் இலக்கணம் அனைத்தும் அமையப் பெற்றுள்ளான்; ஆதலால் இவனே அரசனாவதற்கு உரியன்" என்றான். இச் சொல்லைக் கேட்ட இளங்கோவின் முகம் மாற்றம் உற்றது. நிமித்திகனை வெகுண்டு நோக்கி "மூத்தவன் இருக்க இளைய

வனே ஆளவேண்டும் என்று முறை கெடக் கூறினாய். உன் கூற்றைப் பொய்யாக்குமாறு இப்பொழுதே துறவு கொள்கின்றேன்" என்று துணிந்தார். அப்படியே நடத்திக்காட்டினார்.

இளங்கோ துறவுகொள்ளும் நேரத்தே செங்குட்டுவன் ஆட்சி ஏற்கத் தக்க ஆண்டினனாக இருந்தான். அவனுக்கு நேர் இளையவர் இளங்கோ! செங்குட்டுவனுக்கு நேர்ந்த துயரத்தைக் குறிப்பால் அறியும் திறம் இளங்கோவுக்கு இருந்தது. அத்துயரை மாற்றியமைக்கத்தக்க சிந்தனையும் நொடிப் பொழுதில் தோன்றியது. இவற்றை நோக்குங்கால் செங்குட்டுவனுக்கு அகவை பதினாறும், இளங்கோவுக்கு அகவை பன்னிரண்டும் ஆகவாவது இருந்திருக்கக் கூடும் என்ற முடிவுக்கு வரலாம்.

இது ஒருபுறம் இருக்க, பதிற்றுப் பத்தின் ஐந்தாம் பத்தைப் பாடிய புலவர் பரணர் ஆவர். அவர் பொய்யா நாவிற் பரணர் என்று கொண்டாடப்பெறும் புகழாளர். அவர் செங்குட்டுவனது வரலாற்றைப் பதிற்றுப்பத்தில் குறிப்பிடுகின்றார். சேரன் மேல்கடலிடைக் கொண்ட வெற்றியும், மோகூர் மன்னன் முரசங் கொண்ட வெற்றியும் அவரால் குறிக்கப்படுகின்றன. வடநாடு சென்று பத்தினிக்குக் கல் கொண்டுவந்த வரலாறு அவரால் குறிக்கப்படவில்லை. அன்றியும் பிற்கால வாழ்வில் செங்குட்டுவன் கொண்ட வெற்றிகளும் குறிக்கப்படவில்லை. பரணர் பாடிய பாடல்கள் பதிற்றுப்பத்தினை அன்றி வேறுசில தொகை நூல்களிலும் உள. அங்கெல்லாம் பெரும் வரலாறுகளைச் சுட்டிச் செல்லும் அவர், செங்குட்டுவன் பிற்பகுதி வரலாற்று நிகழ்ச்சிகள் நடந்தபோது இருந்திருப்பாராயின் அவற்றைக் கூறாது விட்டுச் சென்றிருக்கமாட்டார். ஆதலால் பரணர் செங்குட்டுவனது முற்பகுதி வரலாற்றையே தாம் பாடிய பாடல்களில் குறித்தவர் ஆகின்றார்.

இளங்கோவடிகள் தம் நூலில் ஒருகாண்டத்தைச் சேரனுக்கு உரித்தாக்குகின்றார். அங்கே தான் செங்குட்டு வன் வடநாடு சென்று கற்புத் தெய்வத்திற்குக் கல் கொணர்ந்த வரலாறு கூறப்படுகின்றது. இளங்கோவடி களோ ஆய்ந்து தெளிந்து அளவொடு கூறுபவர். ஆகலின் தம் நூலுக்கு ஏற்ப வடவர் போரையும், அதன் வெற்றி யையும் கல்லெடுப்பையும் விரியக் கூறினர். எஞ்சிய பேர் களைக் சுருக்கிக் காட்டினர். இதனல் செங்குட்டுவன் வர லாற்றின் முற்பகுதி பரணராலும், பிற்பகுதி இளங்கோவடி களாலும் குறிக்கப்பட்டது எனலாம். இஃது இவ்வாறாக, ஒவ்வொரு பத்திற்கும் பதிகம் என ஒன்று பதிற்றுப்பத் தைத் தொகுத்தோரால் எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளது. அதனை எழுதியவர், வரலாறும் கால உணர்வும் தெளிய அறிந்தவர் என்பதை அவர் குறிப்புக்கள் அறியச் செய்கின் றன. பதிற்றுப்பத்துக் கூறும் சேர அரசர்கள் அத்தனை பேரின் ஆட்சியும் முடிந்த பின்னர் அவர் தக்க சான்றுகளைக் கொண்டு முறைபெறப் பதிகம் பாடியிருக்க வேண்டும், இவ் வாறு பாடப் பெற்ற பதிகங்களில் ஒன்றே ஐந்தாம் பத்துப் பதிகமாகும். அப்பதிகம் செங்குட்டுவன் நடத்தியதாகப் பரணர் கூறும் போர்களையும், அதற்குமேல் அவன் நடத்திய போர்களையும், இளங்கோவடிகள் குறிப்பிடும் வடநாட்டுப் போரையும் சேர்த்துத் தொகுத்துக் குறிப்பிடுகின்றது. அதில்,

“ கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவிற் கானம் கணையிற் போகி
ஆரிய வண்ணலை வீட்டிப் பேரிசை
இன்பல் அருவிக் கங்கை மண்ணி ”

என்னும் பகுதி குறிப்பிடத் தக்கதாம்.

மற்றும், நமக்குத் துணையாகும் நல்லதோர் குறிப்பு ஒன்றையும் அப்பதிகம் தருகின்றது. “கடல் பிறக்கோட்

4

டிய செங்குட்டுவன் ஐம்பத்தையாண்டு வீற்றிருந்தான்'' என்பதே அது. வாழ்ந்தது ஐம்பத்தையாண்டு அல்ல. அவன் வீற்றிருந்தது-அரியணையில் வீற்றிருந்தது-ஐம்பத்தையாண்டு! இந்த ஆண்டினை வாழ்வு யாண்டு எனக் கருதக்கூடாதோ எனின், பதிற்றுப்பத்தின் வேறுசில பதிகங்களில் பதினாண்டு வீற்றிருந்தான்; பதினேழியாண்டு வீற்றிருந்தான் என்று வருவன வற்றால் ஒவ்வாமை அறிக. அன்றியும் கல்லெழுத்துக்களிலே காணப்பெறும் காவலர் ஆண்டுகள் ஆட்சியாண்டாக இருக்கும் உண்மையும் தெளிக. வாழ்ந்ததை வீற்றிருத்தல் என்னும் வழக்கின்மையும் காண்க!

இங்குக் கூறியவற்றால் செங்குட்டுவன் ஐம்பத்தையாண்டுகள் ஆட்சி செய்ததாகக் கொள்ள வேண்டுவது உண்மையாவதாலும், அவன் பதினாறும் யாண்டிலே ஆட்சிப் பொறுப் பேற்று இருக்கக்கூடும் எனக் கருதுவதாலும் எப்படியும் செங்குட்டுவன் எழுபது யாண்டுகட்குக் குறைவு படாமல் வாழ்ந்திருந்தான் என்பது தெளிவாம். மேலும் அவன் பிற்பகுதி வாழ்விலே நிகழ்ந்ததுதான் வடநாட்டுக் கற்கோள் செலவு என்பதை ஒருவழியால் ஆராய்வோம்.

சேரனது முற்பகுதி நிகழ்ச்சியாயின் மிக உயர்ந்ததான இச் செயலைப் பரணர் கூறாது விட்டுச் சென்றிருக்க மாட்டார் என்பது உறுதி, இது நிற்க; வடநாடு சென்று கண்ணகிக்குக் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி வஞ்சிமாநகர் வந்து சேர்ந்த செங்குட்டுவன் ஆடல்பாடல்களில் மகிழ்ந்து அரியணையில் அமர்ந்திருந்தான். அதுபோழ்து நீலன் என்னும் ஒற்றர்தலைவன் வந்தான். நீலனோ, தமிழர் தம் ஆற்றலை இகழ்ந்த கனக விசயரைச் சேரன் ஆணைப்படிப் பாண்டிய, சோழ வேந்தர்க்குக் காட்டிவரச் சென்றவன், அவன், பார்த்திபர் இருவரும் ''தோற்றோடியவரைச் சிறைசெய்து வந்த வெற்றி யோலொரு வெற்றி கண்டிலேம்'' என்று கூறிய இழிமொழியைக் கொண்டுவந்து சேரனிடம் சேர்த்தான்.

அதனால் செங்குட்டுவன் சீற்ற முற்றுச் சோழ பாண்டியர் களுடன் போரிட எழுந்தான். அதுபோழ்து அருகில் இருந்த மாடலன் என்னும் மறையோன்,

"வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
ஐயைந் திரட்டிச் சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோ யாயினை" என்றான்.

இவன் கூற்றால் செங்குட்டுவன் வடநாடு சென்று மீண்ட பொழுது ஆண்டு வையங்காவல் பூண்ட ஆண்டு ஐயைந் திரட்டி (ஐம்பது) ஆகிவிட்டது. முன்னரே பதினாறு இள மையில் செங்குட்டுவன் ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கக் கூடும் எனக் கருதிக் கொண்டு விட்டபடியால் இப்பொழுது 66 யாண்டுகள் ஆகவேண்டும்.

செங்குட்டுவன் வடநாடு சென்று இமயத்தில் கல் எடுத் துக் கங்கைக் கரை வர "எண்ணான்கு மதியம்" ஆகின்றது. அதன் பின்னர் சில தினங்கள் செலவிட்டே வஞ்சி வந்தடைந் திருக்கக் கூடும். ஆகலின் செங்குட்டுவன் வடநாட்டுச் செலவுக்கு மூன்று யாண்டுகளேனும் செலவிட்டிருக்கலாம். ஆதலால் தனது 63ஆம் ஆண்டில் குன்றக் குறவர்களாலும், புலவர் சாத்தனாராலும் தன் தம்பி இளங்கோவுடன் இருந்து கண்ணகி வரலாற்றை அறிந்து கொண்டான் செங்குட்டு வன். அப்பொழுது இளங்கோவடிகள் அகவை 59 ஆக இருத்தல் வேண்டுமன்றோ!

இமயக் கல்கொண்டு வந்த பின்னர் கண்ணகியார் கோவில் கட்டவும், திருச்சுற்றி எடுக்கவும், நடுகல்விழா நடத்தவும், அண்டை நாட்டு வேந்தர்களுக்கும், அயல் நாட்டு மன்னர்களுக்கும் அழைப்பு அனுப்பி வரச் செய்தற்கும் ஆண்டுகள் சில கடந்தன. பதிற்றுப்பத்துப் பதிக ஆசிரி

யர் கூறியவாறு செங்குட்டுவனது 55 யாண்டு ஆட்சியில் எஞ்சியிருக்கும் ஐந்தாண்டுகளையும் இப்பணியிலே செலவிட்டான் என்று உறுதி செய்யலாம்.

தனது ஆட்சியின் ஐம்பத்தைந்தாம் ஆண்டின் எல்லையிலே கண்ணகியார் கோவிலுள் அமைந்திருந்த வேள்விச் சாலைக்குச் செங்குட்டுவன் சென்றான். அவ்வமயம் அவனுடன் அவன் தம்பி இளங்கோவடிகளும் உடன் சென்றார். அதனால் 71 யாண்டுச் செங்குட்டுவனுடன், அவனுக்கு நான்கு ஆண்டுகள் இளையவரான 67 யாண்டு அடிகளும் சென்றார் என்று ஆகின்றது.

தமது ஐம்பத்தொன்பதாம் ஆண்டிலே குன்றக்குறவர் கூறிய கண்ணகியார் வரலாற்றையும், அதனை விளக்கிக் கூறித் தூண்டியும் வேண்டியும் நின்ற சாத்தனார் கூற்றையும் உளத்தே தேக்கி ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் எண்ணி எண்ணித் திளைத்த அடிகள் அதன் பின்னரே தம் புலமைச் செறிவும் கலை நலமும் திகழ முத்தமிழ்க் காப்பியமாம் சிலம்பை இயற்றினர் ஆதல் வேண்டும்.

கண்ணகியாரின் வரலாற்றைக் கேட்டவுடனே அடிகள் நூல் தொடங்கிப் பாடியிருக்கக் கூடாதோ எனின், சாத்தனார் வரலாற்றை அடிகளிடம் கூறும் இடமே, வரலாற்றின் வேறொரு திருப்பத்திற்கு உரிய இடமாக அமைந்து, அது வஞ்சிக் காண்டமாக வளர்ந்து விடுகின்றது அல்லவா! பிறகு உடனே எப்படிப் பாடத் தொடங்க முடியும்? மேலும், இலக்கியம் நாட் குறிப்பா? அவ்வாறு இருக்குமாயின் கண்டவுடனே கேட்டவுடனே குறித்து விடமுடியும்; குறிக்கவும் வேண்டும். சீரிய காவியம் பாடத் தொடங்குவோர் அதன் முடிநிலை தெளிந்தன்றித் தொடங்குதல் இயல்பு இல்லை. அன்றியும் சிலம்பினைச் சிறிது நோக்கிப் பார்ப்பினும் வஞ்சிக் காண்ட நிகழ்ச்சிகள்பல புகார், மதுரைக் காண்டங்களிலே சுட்டப் பெறுவதை உணரக் கூடும். ஆகலான் வர

லாறு அனைத்தும் நிகழ்ந்த பின்னரேதான் அடிகள் சிலம்பு பாடத் தொடங்கினர் என்பது தெளிவாம்.

ஆகையால் பன்னாட்டு வேந்தரும் பாராட்டுமாறு செங்குட்டுவன் சிலைக் கோவில் எடுத்து வழிபாடு செய்த பின்னரே அடிகள் கலைக் கோவிற் பணி தொடங்கினர். அப்பணி தொடங்கும் காலையில் அடிகட்கு வயது ஏறக்குறைய 67 ஆக இருத்தல் வேண்டும். காவியம் எழுதவும், அரங்கேற்றம் செய்யவும் மேலும் சில பல ஆண்டுகளைச் செலவிட்டு நிறைநாட் செல்வராய்ப் பெருவாழ்வுற்றிருக்க வேண்டும் என்பது உறுதியாகும்.

# சங்கச் செய்திகள்

★

காலஞ்சென்ற பசுமலை, நாவலர், கணக்காயர், டாக்டர் திரு. ச. **சோமசுந்தர பாரதியார்** அவர்கள், தம் இல்லத்தில் வைத்திருந்த நூல் நிலையப் புத்தகங்களை மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்குவதென்று, அன்னவர் குடும்பத்தினர் செய்த முடிவுக்கிணங்க நாவலர் மனைவியார் திருமதி **வசுமதிபாரதி** அம்மையாரவர்கள் அன்புடன் அளித்த நூல்களின் விவரம்:—

| சங்க நூல்கள் | இயற்றியவர் |
|---|---|
| 1. பரிபாடல் மூலமும் உரையும் | — உ. வே. |
| 2. நற்றிணை நானூறு மூலமும் உரையும் | — பின்னத்தூர் நாராயண சாமி |
| 3. இனியது நாற்பது மூலமும்-உரையும் | — ரா. ராகவ |
| 4. கலித்தொகை | — சி. வை. தா. |
| 5. பத்துப்பாட்டுஉரையுடன் | — உ. வே. சா. |
| 6. குறுந்தொகை மூலமும்-உரையும் | — உ. வே. சா. |
| 7. அகநானூறு | — ரா. ராகவ |
| 8. சீவக சிந்தாமணி | — உ. வே. சா. |
| 9. பெருங்கதை | — ஷை. |
| 10. ஐங்குறு நூறு | — ஷை |
| 11. கல்லாடம் மூலமும்-உரையும் | — |
| 12. ஐந்திணை ஐம்பது | — ரா. ராகவ |
| 13. பதிற்றுப் பத்து | — உ. வே. சா. |

14. பழமொழி
மூலமும் உரையும் — தமிழ்ச் சங்கம்
15. மணிமேகலை — உ. வே. சா.
16. திருக்குறள்
மூலமும்-உரையும் — இரத்தின நாயகம்
17. பாலைக்கலி — இராமையாப் பிள்ளை
உரை

*

| இலக்கண நூல்கள் | இயற்றியவர் |
|---|---|
| 1. பிரயோக விவேகம் | — சுப்பிரமணிய தீட்சதர் |
| 2. தமிழ் இலக்கணத் தெளிவு | — நா. வீ. து. யோ. |
| 3. சிதம்பரப் பாட்டியல் | — தமிழ்ச்சங்கம், மதுரை |
| 4. இலக்கண விளக்கமும் மூலமும்-உரையும் | — வைத்தியநாத தேசிகர் |
| 5. யாப்பருங்கலக்காரிகை | — கோவிந்தராச முதலியார் உரை |
| 6. தண்டியலங்காரம் | — குமாரசுவாமிப் புலவர் உரை |
| 7. யாப்பருங் கலவிருத்தி | — Vol. I பவானந்தம் பிள்ளை யுரை |
| 8. ,, ,, ,, | — Vol. II ,, ,, |
| 9. தொல்காப்பியம் செய்யுளியல் | — நச்சர் உரை (ரா. ராகவ) |
| 10. அகப்பொருள் விளக்கம் | — பாண்டித்துரை |
| 11. தொல் - பொருளியல் | — நச்சர் உரை( சி.வை.தா.) |
| 12. தொல் – எழுத்து | — ,, ,, |
| 13. தொல் | — இளம்பூரணம் |
| 14. நேமிநாதம் | — ரா. ராகவ |
| 15. பன்னிரு பாட்டியல் | — ரா. ராகவ |
| 16. நன்னூல் காண்டிகை | — ஆறுமுக நாவலர் |

17. தொல் - பொருள் (முதற்பாகம்) — வையாபுரிப்பிள்ளை

18. தொல்-சொல்லதிகாரம் — சேனாவரையர் (தாமோ)

19. தொல் - சொல் — நச்சர் (சி, வை. தா.)

20. செந்தமிழ் இலக்கணம் (Vol. I) — பொன்னம்பலராமநாதன்

21. தசகாரிய விளக்கம் — முத்தையாப்பிள்ளை

22. இறையனார் அகப்பொருள் — பவானந்தம் பிள்ளை

23. திராவிட மொழியின் மூவிடப் பெயர் — வேங்கடராசலு ரெட்டியார்

24. இலக்கணக்கொத்து — சாமிநாததேசிகர்

25. இலக்கணச் சுருக்கம் — ஆறுமுக நாவலர்

26. தொல்காப்பிய ஆராய்ச்சி V 2 சா. சோ. பாரதி

27. ,, VII 2 ,,

28. ,, உள்ளுறை VIII 1 ,,

29. ,, ,, VII 1 ,,

30. ,, ,, VII 12 ,,

31. ,, ,, V1, ,,

[தொடரும்]

# மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

## I. சங்க வெளியீடு

| | | | ரு. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | — | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | — | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம் | — | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) | — | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் | — | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடை வெண்பா | — | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | — | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ண சரித்திர விமர்சனம் | — | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (தொகுப்பு) | — | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ் வெளியீடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) | — | 0 | 4 | 0 |
| 2. | கணுநூல் (5) இனியது நாற்பது (உரை) | — | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | — | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | — | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 9. | அநுமான விளக்கம் | — | 0 | 10 | 0 |
| 10. | அட்டாக யோகக்குறள் | — | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் | — | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | — | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் | — | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | — | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை | — | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் | — | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | — | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும்உரையும் | — | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா | — | 0 | 8 | 0 |
| 24. | குருமொழி வினா விடை | — | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை | — | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைதிருவிருத்தம் | — | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை | — | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை | — | 0 | 3 | 0 |
| 31. | மநீஷாபஞ்சகம் | — | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் | — | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | — | 4 | 8 | 0 |
| 3[illegible]. | திருப்பல்லாண்டிமாலை | — | 0 | 2 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் | — | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகை நிகண்டு | — | 0 | 6 | 0 |
| 42. | அகராதி நிகண்டு | — | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடு தூது | — | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை | — | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார் சதகம் | — | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் | — | 0 | 3 | 0 |
| 47. | பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100) | | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் | — | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் | — | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) | — | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள் விளக்க நிகண்டு | — | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | — | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் | — | 0 | 10 | 0 |
| 57. | மதுரை மும்மணிக்கோவை | — | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் | — | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர் கோயில் உலா | — | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி | — | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை | — | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை | — | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 65. | மத்யவியாயோகம் | — | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜநி | — | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் | — | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா | — | 0 | 12 | 0 |
| 71. | துணைத்தலைவர் நினைவுமலர் | — | 0 | 10 | 0 |

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் ''செந்தமிழ்'' இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1. 2. 3. 6. 7. 8. 9. 10. 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A.. Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.